**இரண்டாந் தர நகரங்கள் மற்றும் கிராம சமூக அடிப்படையிலான நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்திட்டம் (கடன் இல 2276 எஸ்ஆர்ஐ) - 2013**

---

இரண்டாந்தர நகரங்கள் மற்றும் கிராமிய சமூக அடிப்படையிலான நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்திட்டத்தின் (எஸ்ஆர்ஐ) 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடிபீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2006 திசெம்பர் 14 ஆம் திகதிய செயற்திட்ட உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரையின் 2.09 ஆம் பிரிவு மற்றும் 2276 எஸ்ஆர்ஐ ஆம் இலக்க கடன் உடன்படிக்கை என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு (ஜீஓஎஸ்எல்) அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணியின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன

---

இரண்டாந்தர நகரங்கள் மற்றும் கிராமிய சமூக அடிப்படையிலான நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் படி, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சின் கீழுள்ள தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச்சபை பிரதான செயற்திட்ட நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கல் முகவராகவுள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியானது 2003 ஆகஸ்ட் 18 ஆம் திகதியில் இலங்கை அரசாங்கத்தின் பகுதி உள்ளடங்கலாக ஐக்கிய அமெரிக்க டொலர் 60.3 மில்லியன் தொகையான 1993 எஸ்ஆர்ஐ (எஸ்எவ்) ஆம் இலக்கக் கடனை அனுமதித்திருந்தது. வட மத்திய மாகாணத்தின் ஐந்து நகரப்பகுதிகள் மற்றும் கிராமப் பகுதிகளிலுள்ள 969,000 மக்களுக்கு பாதுகாப்பான நீர் வழங்குதல் மற்றும் 171,500 மக்களுக்கு சுகாதார வசதிகளை வழங்குதல் என்பவற்றுடன் நீர்த்துறை நிறுவனங்களைப் பலப்படுத்துவதன் மூலம் பாதுகாப்பான நீரை வழங்குவதற்கான இலங்கையின் இயலளவை அதிகரித்தல் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். செயற்திட்டம் அதன் ஆரம்ப மதிப்பீட்டிலுள்ள விலைத் தளம்பல் காரணமாக மூதூர் நகரப் பகுதியில் தலைமை வேலைகள், பிரதான மூல நீர் சுத்திகரிப்பு பொறி (40,000 எம்3/நாள்) மற்றும் வடிவமைப்பு, கட்டியெழுப்பல், சுத்திகரிக்கப்பட்ட சீர் பரிமாற்ற பிரதான குழாய் வழிகளின் பொருத்தல் (36 கிமீ) மற்றும் விநியோக குழாய் வழிகளின் பொருத்தல் (145 கிமீ) மற்றும் ஏழு மதிப்பிடப்பட்ட தண்ணீர் கோபுரங்களின் நிர்மாணம் மற்றும் வெள்ள நீர் வடிகாலமைப்பு நிர்மாணம் மற்றும் பூர்த்தியாக்கலின் முன்னேற்றம் என்பவற்றை செய்வதற்கு குறைநிரப்பு கடனொன்றை (கடன் இல 2276- எஸ்ஆர்ஐ) வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி உடன்பட்டிருந்து. குறைநிரப்பு கடன் உடன்படிக்கையின்படி, செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ஐ.அ.டொலர் 70.5 மில்லியனானதுடன் அதில் ஐ.அ.டொலர் 46.5 மில்லியன் அல்லது 66 சதவீதம் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பட்டிருந்ததுடன் இலங்கை அரசாங்கத்தால் ஐ.அ.டொலர் 24 மில்லியன் அல்லது 34 சதவீதம் நிதியளிக்க உடன்பட்டிருந்தது. கிரய அதிகரிப்பின் விளைவாக, ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட மொத்தத் தொகை ஐ.அ.டொலர் 48.79 மில்லியன் வரை அதிகரித்திருந்ததுடன் இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பும் ஐ.அ.டொலர் 41.87 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2009 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென்று பட்டியலிடப்பட்டிருந்தது. பின்னர் செயற்திட்டக் காலப்பகுதி 2012 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் இலங்கை அரசாங்கத்தால் செய்யப்பட்ட நிதி ஏற்பாடுகளுடன் 2013 திசெம்பர் 31 வரை தொடர்ந்திருந்தது.

## 1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்த நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கேற்ப தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும்

அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்**

---

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பாரத்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள் மற்றும் நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்ககான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்று நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பீடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணுதல் என்பவற்றை தொடர்ச்சியான அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டு இருந்தனவா என்பதும்,

(உ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) பொதுவாக ஏற்றுக்கொள்ளகப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) எனது முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 3. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிலிருந்து எழக்கூடிய சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொளள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கிணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4. நிதிக்கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

நிதிசார் கூற்றுக்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி, 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்ட செலவினம் ரூபா 76,795,902 ஆனதுடன் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான திரண்ட செலவினம் ரூபா 9,767,167,456 ஆகும். மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்ான செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பு கீழே காட்டப்படுகின்றது.

| விடயம் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2013 | 2012 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| சிவில் வேலைகள் | 67,760,664 | 372,819,470 | 5,859,830,348 |
| உபகரணங்களும் பொருட்களும் | 9,035,238 | 146,935,500 | 3,748,751,922 |
| வட்டிக் கட்டணங்கள் | - | 19,976,386 | 158,585,186 |
| மொத்தம் | 76,795,902 | 539,731,356 | 9,767,167,456 |

### 4.2 கட்டுநிதி நிதியக் கணக்கு

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி, 2013 ஆம் ஆண்டில் கட்டுநிதி நிதியக் கணகக்கு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்காய்வு அவதானிப்புகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இரண்டு ஒப்பந்தங்களிற்கான வேலை பூர்த்தியாக்கல் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்த போதிலும் வீதிகளின் புதுப்பித்தலிற்காக வீதி அபிவிருததி அதிகாரசபையின் சார்பில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் செய்யப்பட்ட ரூபா 5 மில்லியன் தொகையான வங்கி உத்தரவாதங்கள் 2014 யூலை 31 வரையும் செயற்திட்டத்தால் மீளப்பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிர்மாண கைத்தொழில் உத்தரவாத நிதியத்தின் வரியாக ஒப்பந்த கெடுப்பனவின் ஒரு சதவீதம் கழிக்கப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும் செயற்திட்டம் இந்த வேண்டுகையுடன் இணங்கியிருக்கவில்லை.

(இ) ரூபா 67,654 தொகையான தேறிய வெளிநாட்டு நாணய வித்தியாசம் நிதிக் கூற்றுக்களில் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் முறையற்ற விதத்தில் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) காசுப் பாய்ச்சல் கூற்றின் படி, உபகரணங்கள் மற்றும் பொருட்கள் கொள்வனவு செய்வதற்கு 2013 இல் ரூபா 43 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் கணக்கின் படி, இது ரூபா 66 மில்லியாக காட்டப்பட்டிருந்தது. எனவே, காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்ட உபகரணங்கள் மற்றும் பொருட்கள் கொள்வனவு செய்வதற்கு செய்யப்பட்ட கொடுப்பனவுகள் ரூபா 23 மில்லியனால் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது. மேலும், 2013 இல் சிவில் வேலைகளிற்காக செய்யப்பட்ட ரூபா 125 மில்லியன் தொகையான கொடுப்பனவுகள் ரூபா 178 மில்லியனாக பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் கணக்கில் காட்டப்பட்டிருந்தது. எனவே, காசுப்பாய்ச்சல் கூற்றில்

காட்டப்பட்ட சிவில் வேலைகளிற்கான கொடுப்பனவுகள் ரூபா 53 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) 2010 யூலை 26 ஆந் திகதிய 05 ஆம் இலக்க முகாமைத்து கணக்காய்வு சுற்றறிக்கையின் படி, செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் உள்ளக கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) பதிவேடுகளின் படி, 7,910 கனமீற்றர் பாறை இரண்டு ஒப்பந்தங்களின் கீழ் வெடிக்கவைக்கப்பட்டதுடன் அவற்றின் மீது ரூபா 58 மில்லியன் செலவழிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், வெடிக்கவைக்கப்பட்ட பாறைகற்களை பயன்படுத்தப்பட்டதற்கோ அல்லது விற்கப்பட்டதற்கோ ஆதரவான ஆவணச் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) பதவியணியினர் பயிற்சி நிர்வாக கட்டிடத்திற்கான தளபாட உபகரணங்களின் கொள்வனவு என்பவற்றிற்காக செய்யப்பட்ட ரூபா 8.6 மில்லியன் தொகையான ஒதுக்கீடுகள் மண்தோண்டும் இயந்திரம் கொள்வனவு செய்வதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

## 6. நிதிசார் மீளாய்வு

### 6.1 நிதிகளின் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பட்டியலிடப்பட்ட நேர காலத்திற்குள் ஒதுக்கப்பட்ட வளங்களைப் பயன்படுத்தி செயற்திட்ட நோக்கங்கள் எய்தலை மாதாந்த, காலாண்டு மற்றும் அரையாண்டு போன்றன ரீதியாக நிதிசார் மற்றும் பௌதீக இலக்குகளை சுட்டிக்காட்டுவதன் மூலம் முழுச் செயற்திட்டக் காலத்தையும் மேவி முழுமையான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டி இருந்தது. எவ்வாறாயினும், அத்தகைய திட்டம் செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட்டு அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான நிதியளிப்பு மற்றும் பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதான நிதிகளின் பயன்பாடு மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | வழங்கப்பட வேண்டுமென உடன்பட்ட தொகை | | 2013 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | ஆண்டின் போது பயன்படுத்திய நிதிகள் | 2013 திசெம்பர் 31 வரை பயன்படுத்தப்பட்ட நிதிகள் | |
|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) | ஐ.அ.டொலர் (மில்) | ரூபா (மில்) |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 48.80 | 5,500.80 | 2.16 | 2.15 | 48.8 | 5,490.94 |
| இலங்கை அரசாங்கம் | 41.87 | 4,720.10 | 245.94 | 175.67 | 36.8 | 4,066.71* |
| மொத்தம் | 90.67 | 10,220.90 | 248.1 | 177.82 | 85.6 | 9,557.65* |

* நிதிக் கூற்றுக்களின் படி இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பு ரூபா 4,133.03 மில்லியனானதுடன் வித்தியாசங்கள் ரூபா 66.32 மில்லியனாகும். தயவு செய்து இந்த அறிக்கையின் 4.1 (அ) ஆம் பந்தியைப் பார்க்கவும்.

**6.2 பௌதீக முன்னேற்றம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சமர்ப்பிக்கப்பட்ட தகவலின்படி, செயற்திட்டம் தொடங்கியதிலிருந்து ஐ.அ.டொலர் 63.24 மில்லியன் தொகையான நான்கு ஒப்பந்தங்கள் அமுலாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் அமுலாக்கலிலுள்ள தாதமத்தின் காரணமாக பிரதானமான அதிகரிப்பு 43.3 சதவீதத்தில் விளைந்தமையால் மதிப்பிடப்பட்ட கிரயம் 2010 இல் ஐ.அ.டொலர் 90.66 மில்லியனாக திருத்தப்பட்டிருந்தது. ஒப்பந்தங்கள் 2012 ஏப்பரல் 30 இல் உள்ளவாறு முழுமையாக பூர்த்தியாக்கப்பட்டிருந்த போதிலும் ஒரு ஒப்பந்தம் தொடர்பான இறுதிப் பட்டியல் 2014 யூலை 31 வரையும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எனவே, உரிய ஒப்பந்தத்தின் மொத்தக் கிரயம் கணக்காய்வில் மதிப்பிட முடியவில்லை.

(ஆ) இரண்டு ஒப்பந்தங்களின் பெயருடைய, மேற்குறிப்பிட்ட பந்தியில் குறிப்பிடப்பட்ட ஒப்பந்தங்களில் தலைமை வேலைகள், பிரதான நீர் மற்றும் நீர் சுத்திகரிப்பு பொறி (திட்டம், வடிவமைப்பு மற்றும் கட்டியெழுப்பல்) (பிஏ 1) மற்றும் சுத்திகரிக்கப்பட்ட நீர் பரிமாற்ற பிரதான குழாய் வழிகளின் வழங்குதல் மற்றும் பொருத்தல் (பிசீ 1) என்பவற்றின் நிர்மாணம் மற்றும் பூர்த்தியாக்கல் முறையே 19 மாதங்கள் மற்றும் 21 மாதங்கள் பூர்த்தியாக்கல் திகதியுடன் ஒப்பிடும் போது தாமதப்பட்டிருந்தது. அந்த இரண்டு ஒப்பந்தங்கள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் முறையே 2011 ஒக்தோபர் 20 மற்றும் 2012 ஏப்ரல் 30 இல் பதலீட்டு பூர்த்தியாக்கல் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தது என மேலும் அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், இறுதி பூர்த்தியாக்கல் அறிக்கை 2014 மே மாதம் இறுதி வரையும் வழங்கப்பட்டிருக்கவில்லை.